**DEPOSITION OF WITNESS**(**Chapter XXIII Code of Criminal Procedure**)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE (PCR),

THANJAVUR.

**Case No**. **S**.**S**.**C**.**No**.31/2022

**Prosecution**. **PW**.1

| | | |
|---|---|---|
| Deposition of Witness Name | : | கௌரி |
| Father's/Husband Name | : | க/பெ. வெற்றிவேல் |
| Village | : | சென்டாங்காடு |
| Age | : | 36 |

Solemnly affirmed by Thiru.K.Lakshminarayanan, Bench Clerk Gr-1 of this Court in accordance with the provisions of Oaths Act on the day of **16.12.2024**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சென்டாங்காடு என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் கிராம ஊராட்சி செயலாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 07.01.2022 அன்று காலை 10.00 மணி இருக்கும். நான் அப்போது சிவன்கோவில் அருகில் சென்று கொண்டிருந்தபோது அப்போது பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் உதவி தொகை இன்னும் தங்களுக்கு கிடைக்கில்லலை என்று சிலர் என்னிடம் முறையிட்டனர். அந்த தொகை அரசிடமிருந்து நிச்சயமாக வரும் என்று அவர்களிடம் தெரிவித்தேன். என்னிடம் நிறைய பேர் வந்து பணம் கிடைக்கவில்லை என்று சத்தம் போட்டார்கள். இந்த வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் திட்டக்குடியை சேர்ந்தவர். எதிரி என்னை அடித்தார். எதிரி, சாட்சிகள் ஜெயராணி, பருவதம் ஆகியோரை பறச்சி என்று சொல்லி எதிரி அவர்களையும் அடித்தார். அதன்பிறகு ஊராட்சி மன்ற தலைவர் சம்பவயிடத்திற்கு வந்தார். நடந்த சம்பவம் பற்றி அவரிடம் சொன்னேன். அதன்பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பணம் ஏறவில்லை என 10, 15 நபர்கள் வந்து கூட்டமாக என்னிடம் வந்து கேட்டார்கள். யார் யார் வந்து என்னிடம் பணம் கேட்டார்கள் என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது. நான் சொல்ல சொல்ல புகாரை போலிசார் எழுதினார்கள், நான் கையெழுத்து போட்டேன். அந்த புகாரில் ஜெயராணியும், பருவதமும் சாட்சி கையெழுத்து போட்டார்கள். அந்த புகார்

தான் நீதிமன்றத்தில் உள்ளது. கூட்டத்தில் ராமசந்திரனும் வந்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. என்னை யாரும் அடிக்கவில்லை என்றாலும், யாரும் கெட்ட வார்த்தையால் திட்டவில்லை என்றாலும் சரியல்ல. ராமசந்திரன் கூட்டத்தில் அங்கில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த தேதிக்கும், சம்மன் கொடுத்த தேதிக்கும் இடையில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல என் உத்தரவுப்படி
தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்).இரா.சத்திய தாரா,**
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
(கு.உ.பா.), தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**(**Chapter XXIII Code of Criminal Procedure**)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE (PCR),

THANJAVUR.

**Case No**. **S**.**S**.**C**.**No**.31/2022

**Prosecution**. **PW**.2

| | | |
|---|---|---|
| Deposition of Witness Name | : | பர்வதம் |
| Father's/Husband Name | : | க/பெ. ரெத்தினம் |
| Village | : | திட்டக்குடி |
| Age | : | 54 |

Solemnly affirmed by Thiru.K.Lakshminarayanan, Bench Clerk Gr-1 of this Court in accordance with the provisions of Oaths Act on the day of **16.12.2024**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திட்டக்குடி என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் திட்டக்குடி கிராம தூய்மை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்து ஆதி திராவிடர் பறையர் ஜாதியை சேர்ந்தவர். அ.சா.1 கிராம ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வருகிறார். சாட்சி ஜெயராணி என்னுடன் தூய்மை காவலராக பணிபுரிந்து வருகிறார். ஆஜர் எதிரியை தெரியும். அவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். அவர் கோனார் ஜாதியை சேர்ந்தவர். சாட்சி தென்னவனை எனக்கு தெரியும். 07.01.2022 அன்று காலை 10.00 மணியளவில் திட்டக்குடி சிவன்கோவில் அருகில் எதிரி வீடு கட்டுவதற்கான பணம் வரவில்லை என்று அ.சா.1-ம் சத்தம் போட்டு கொண்டிருந்தார். அவரை தேவடியா, குச்சிகாரி என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். நானும், ஜெயராணியும் அந்த இடத்தில் இருந்தோம். நாங்கள் அவரை சமாதானம் செய்தோம். அதற்கு எதிரி எங்களை கெட்ட வார்த்தை சொல்லி திட்டினார். போலிசார்கள் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். போலிஸ் சம்பவம் குறித்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பணம் ஏறவில்லை என 10, 15 நபர்கள் வந்து கூட்டமாக அ.சா.1னிடம் வந்து கேட்டார்கள். யார் யார் வந்து அ.சா.1னிடம் பணம் கேட்டார்கள் என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது. அப்போது அங்கு ஒரே சத்தமாக இருந்தது. அப்போது போலிசார் செயலாளரிடம் கையெழுத்து வாங்கினார்கள். ஜெயராணியிடமும், என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். அதன்பிறகு சாட்சி சொல்ல சம்மன் போலிசார்

கொடுத்தார்கள், இதற்கிடையில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அந்த கூட்டத்தில் ராமசந்திரன் இருந்தரா, இல்லையா என்று எனக்கு தெரியாது. ஒரே கலவரமாக சண்டையாக இருந்தது மட்டும் எனக்கு தெரியும், என்னை யாரும் குறிப்பிட்டு திட்டவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், ஊரில் பெரிய கலவரம் நடந்தது என்றும், போலிசார் சொல்லி கொடுத்து போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல என் உத்தரவுப்படி
தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்).இரா.சத்திய தாரா,**
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
(கு.உ.பா.), தஞ்சாவூர்.